# SRI SANKARA ARTS AND SCIENCE COLLEGE

Autonomous

*A Unit of Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust and Affiliated to University of Madras*

*ENATHUR, KANCHIPURAM - 631 561.*
*Phone : 044-27264066*
*Mail : admin@sankaracollege.edu.in Website : www.sankaracollege.edu.in*


09/09/2023

## MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES

**Department:** Tamil

**Venue:** Board Room

**Date:** 09th September 2023

**Agenda:** Approval of Regulations and Syllabus for Part I Tamil, Basic Tamil, Advance Tamil for all UG Degree Courses, PG Degree Courses, Certificate Courses and Diploma Course to take effect from 2023-2024

The following members were present in the meeting:

1. **Dr. A. EKAMBARAM,** M.A (Tamil, English, Linguistics), M.Phil, Ph.D, B.Ed., PG.Dip in Ling. Professor and Head, Department of Tamil Literature, University of Madras, Chennai - 5 - External Subject Expert Member nominated by the Vice-Chancellor for PG Board

2. **Dr. VAANI ARIVAALAN,** M.A.(Tamil), M.A. (Sociology), Ph.D. (Tamil), PD, Assistant Professor in the Department of Tamil Language, University of Madras. Chennai - 5 - External Subject Expert Member nominated by the Vice-Chancellor for UG Board

3. **Dr. B. RAVIKUMAR**, M.A., M.Phil., Ph.D., Associate Professor, Subramania Bharathi School of Tamil Language & Literature, Pondicherry University, R.V.Nagar, Kalapet, Puducherry – 605014. - External Subject Expert

4. **Dr. K. SIVAKUMAR,** M.A., M.Phil., Ph.D. Associate Professor, Department of Tamil, ThiruKolanjiyappar Government Arts College, Vridhachalam, Cuddalore District - 606 001.- External Subject Expert

5. **Dr. J. RADHAKRISHNAN,** M.A., M.Phil., Ph.D. Assistant Professor & Head, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Chairman.

6. **Dr. G. JAYASHREE,** M.A., M.Phil., Ph.D. Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.

7. **Mr. S. NEELAMEGAN,** M.A., M.Phil., Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.

8. **Dr. N. APPADURI,** M.A., M.Phil., Ph.D., Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Member.

9. **Dr. M. ANBAZHAGAN,** M.A., M.Phil., Ph.D., Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram – Member

10. **Kalaimamani V.K.T. BALAN,** Chairman & managing Director, Madura travel service (p) Ltd, Editor & Publisher, Madura welcome, 25-3, Gandhi Irwin Road, Egmore, Chennai – 600008 - Representative from Industry.

11. **Mr. K. SARAVANAN,** No. 3 Main Road, Dhamal Vilagae, Kanchipuram - 631 551. - U.G. Graduate Alumnus

12. **Dr. K.R. VENKATESAN**, Principal, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram - Special Invitee.

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

1. **Nil**

முந்தைய பாடத்திட்டக்குழுக் கூட்டங்களின் பரிந்துரைகளின்படியும் தமிழ்நாடு அரசு உயர்கல்வி மன்றத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் மாதிரி பாடத்திட்டத்தின் படியும் இப்பாடத்திட்டக் குழுவில் பகுதி *1* க்கான மொழிப்பாடம், இளங்கலை மற்றும் முதுகலை பாடத்திட்டங்கள் குறித்தும் அடிப்படைத்தமிழ், சிறப்புத்தமிழ், சான்றிதழ்ப் படிப்புகள், பட்டயப் படிப்பு பாடத்திட்டங்கள் ஆகியன குறித்தும் கலந்தாலோசிக்கப்பெற்று பின்வருமாறு புதுப்பிக்கப்பெற்று ஒப்புதல் பெறப்பட்டது.

1. இளங்கலைத் தமிழ்ப் படிப்புக்கும் பிற அனைத்து இளநிலை படிப்புகளுக்கும் பகுதி *1* இல் *(Part I Tamil)* நான்கு பருவத்தில் படிக்கும் வகையில் இரு வேறுபட்ட மொழிப்பாடத் திட்டங்கள் உயர் கல்வி மன்றத்தால் பரிந்துரைக்கப்பெற்றுள்ளது. அதன் இறுதி வடிவத்தை *100%* பின்பற்றவேண்டும் என்ற தமிழக அரசின் அறிவுறுத்தலின் படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

2. தமிழ் அல்லாத பிற இளநிலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கான **பகுதி *1* தமிழ்** *(Part I Tamil)* மொழிப்பாடத்திட்டத்தில் மொழிப்பயிற்சி பகுதியில் முதல் பருவத்தில் அகர வரிசைப்படுத்துதல், இலக்கணக் குறிப்புதருதல் முதலியனவும், இரண்டாம் பருவத்தில் மயங்கொலிப் பிழைகள், வழுச்சொல் நீக்கி எழுதுதல், நேர்காணல் ஆகியனவும், மூன்றாம் பருவத்தில் தொடை நலம் காணுதல், அணி நலம் காணுதல், பொருள்கோள், படைப்பிலக்கியம், பேச்சுக்கலை ஆகியனவும் நான்காம் பருவத்தில் செய்தி குறிப்பு, அறிக்கைகள் தயார் செய்தல், மதிப்புரை எழுதுதல் ஆகியனவும் தமிழ்நாடு அரசு போட்டித்தேர்வுகள் நோக்கியும் மாணவர்களின் மொழிவளம் மேம்படுத்தும் நோக்கிலும் சேர்க்கப்பெற்றுள்ளன.

3. இளங்கலைத் தமிழ் *(B.A. TAMIL)* பயிலும் மாணவர்களுக்கான பகுதி *1* தமிழ் *(Part I Tamil)* மொழிப்பாடமாக முறையே **தமிழியல் கல்வி ஆதார வளங்கள், தமிழ் மொழி அமைப்பியல், தமிழ்ப் பொருண்மையியல், தமிழகக் கலைகள்** ஆகியன உயர்கல்வி பாடத்திட்டத்தின்படியே அமைக்கப்பெற்றுள்ளன. இது, இலக்கணம், மொழியியல், நவீன கருவிகள், பண்பாட்டியல் அடிப்படையில் செறிவான வகையில் மொழிக்கல்விக்கான அடிப்படைகளை வழங்குகிறது.

4. **அடிப்படைத்தமிழ்** *(Basic Tamil)* மற்றும் **சிறப்புத் தமிழ்ப்** பாடங்களுக்குப் *(Advance Tamil)* பழைய பாடத்திட்டமே உயர்கல்விமன்றத்தால் பரிந்துரைக்கப்பெற்றுள்ளது. அதையொட்டியே சென்ற பாடத்திட்டக்குழுவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பாடத்திட்டமே புதுப்பிக்கப்பெற்றுள்ளது.

5. இளங்கலைத் தமிழ்ப் பாடத்திட்டத்தில் முந்தைய பாடத்திட்டத்தில் முதன்மைத்தாள்களில் *(Core Courses)* பருவத்திற்கு ஒன்றாக வைக்கப் பெற்றிருந்த இலக்கணத் தாள்கள் *1.* எழுத்திலக்கணம், *2.* சொல்லிலக்கணம் முழுமையான தனித்தாள்களாகவும் அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங்கள் இணைக்கப்பெற்று பொருள் இலக்கணம் என ஒரு தாளாகவும், யாப்பிலக்கணம், அணி இலக்கணம் இணைக்கப்பெற்று ஒரு தாளாகவும் முறையே *3, 4, 5, 6* ஆம் பருவங்களில் வைக்கப்பெற்றுள்ளன. முதுகலைத் தமிழில் *(M.A. TAMIL)* இலக்கணத் தாள்களாகப் பழைய

பாடத்திட்டப்படியே பருவத்திற்கு ஒன்றாக முறையே தொல்காப்பியம் பொருளதிகாரம் இரு தாள்களாகவும், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மூன்றாம் பருவத்திலும், தொல்காப்பியம் சொல்லதிகாரம் நான்காம் பருவத்திலும் அமைக்கப்பெற்றுள்ளன. கூடுதலாக அவை, அவ்வவ் இலக்கண மரபுத் தொடர்ச்சியையும், ஒருங்கு சேர்த்து அறியும் வகையில் இயல் வகுக்கப்பெற்றுள்ளன.

6. பிற முதன்மைத்தாள்களாக *(Core Courses)* இளங்கலையில் முறையே **இக்கால இலக்கியம், தமிழக வரலாறும் பண்பாடும், அற இலக்கியம், தமிழ் இலக்கிய வரலாறு, காப்பியங்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியங்கள், நாட்டுப்புறவியல், சங்க இலக்கியம், திறனாய்வும் படைப்பிலக்கியமும்** ஆகியன வைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறே முதுகலையிலும் முறையே **இக்கால இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம், ஆராய்ச்சி நெறிமுறைகள், சங்க இலக்கியம், ஆய்வேடு** ஆகியன அவற்றின் வரலாற்றுடன் அறியும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

7. விருப்பப்பாடங்களாக *(Elective Courses)* இளங்கலையில் **செம்மொழித்தமிழ், தமிழர் மரபு மருத்துவம், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், தமிழ் மொழி வரலாறு, கோயிற்கலை, கணினித்தமிழ், சுவடியியல்** ஆகியன அமைக்கப்பெற்றுள்ளன. அவற்றுக்கு மாற்றாகவும் மாணவர் விருப்பத் தேர்வுக்கு வசதியாக முறையே **அண்ணாவியல், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, தமிழரின் மேலாண்மைச் சிந்தனைகள், சமூகநீதி இயக்கங்களும் இலக்கியங்களும், தமிழ் அழகியல், நாடகத்தமிழ், இந்தியத் தத்துவ ஞானம்** ஆகியன வைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறே முதுகலையில், **அயலகத் தமிழ் இலக்கியம், தமிழ் ஆவணங்கள், நோக்கு நூல்கள், ஊடகத்தமிழ், பொதுமொழியியல், சைவசித்தாந்தம்** ஆகியன வைக்கப்பெற்றுள்ளன. அவற்றுக்கு மாற்றாக முறையே **உரையாசிரியர்கள், பெண் எழுத்து, தமிழ்க் கலை மரபும் பண்பாடும், சமஸ்கிருதமும் தமிழும், சித்தர் இலக்கியம், ஒப்பிலக்கியம், தமிழ் இலக்கண வரலாறு** ஆகிய தாள்கள் மாணவர் விருப்பத்தேர்வுக்குக்கத்க, கூடுதலாக வழங்கப்பெற்றுள்ளன. இந்த மிகை விருப்பப் பாடங்கள் ஒரு மாணவரால் அவரது பாடத்திட்டத்திற்குள் தேர்வுசெய்ய இயலாமல் போனாலும் மதிப்புக்கூட்டுப் பாடமாக சான்றிதழ்ப் படிப்பில் படிக்கத்தக்க வகையில் **சுற்றுலாவியல், கல்வெட்டியல், தொல்லியல், சுவடியியல், மரபிசை, சைவசித்தாந்தம்** ஆகியன வடிவமைக்கப்பெற்றுள்ளன.

8. இளங்கலையில் திறன் மேம்பாட்டுப் பாடங்களாக (*Skill Enhancement*), **பேச்சுக்கலைத்திறன், நூலகவியல், மொழிபெயர்ப்பியல், சுற்றுலாவியல், அறிவியல் தமிழ், இதழியல், பணி வாய்ப்புத் தமிழ்** ஆகியன வைக்கப்பெற்றுள்ளன. அவற்றுக்கு மாற்றாக, மாணவர்களின்

விருப்பத்தேர்வுக்கு இடம்தரும் வகையில் **பயன்முறைத்தமிழ், அகராதியல், கல்வெட்டியல், இசைத்தமிழ், தொல்லியல், ஊடகவியல், தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து** ஆகிய பாடங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. முதுகலையில் திறன் மேம்பாட்டுப் பாடங்களாக **நூலகவியல், அகராதியியல், போட்டித்தேர்வுகளுக்குரிய தமிழ் இலக்கிய வரலாறு** ஆகியனவும் அவற்றுக்கு மாற்றாக, **மொழிபெயர்ப்புக்கலை, கள ஆய்வும் நேர்காணலும், பதிப்புக்கலை, கல்வெட்டியல்** ஆகியனவும் அமைக்கப்பெற்றுள்ளன.

9. இளங்கலை முதல் பருவத்தில் அடிப்படை பாடமாக (*Foundation Course*), சென்னைப்பல்கலைக்கழகத்தைப் பின்பற்றி தமிழ் இலக்கியம் பயில வரும் மாணவர் எளிய நிலைகளில் இலக்கிய அடிப்படைகளை அறியும் வகையில் **தமிழில் சிறார் இலக்கியம்** வடிவமைக்கப்பெற்றுள்ளது. அவ்வாறே முதுகலை நிறைவு பருவத்தில் *(Professional Competency Skill Enhancement)* அவர்களுக்குப் பணி வாய்ப்புக்கு வழிகாட்டும் வகையில் போட்டித்தேர்வுகளுக்கான பாடமும் அவர்களது மேற்படிப்புக்கு உதவும் வகையில் **சமகாலத் தமிழியல் ஆய்வுச் செல்நெறிகள்** அமைக்கப்பெற்றுள்ளன.

10. மேற்படி இளங்கலை மற்றும் முதுகலைத் தமிழ்ப் பாடத்திட்டங்கள் அனைத்தும் உயர் கல்வி மன்ற மாதிரி பாடத்திட்டத்திலிருந்து (*TANSCHE*) 30 சதவிகிதத்திற்குள்ளாக மாற்றி அமைக்கப்பெற்றுள்ளன.

11. முந்தைய பாடத்திட்டக்குழு பரிந்துரையின்படியே ஒரு செய்முறை தாள் ஓர் எழுத்துத் தேர்வுக்குரிய தாள் என்ற வகையில் **சுற்றுலாவியல், கல்வெட்டியல், தொல்லியல், சுவடியியல், மரபிசை, சைவசித்தாந்தம்** ஆகிய சான்றிதழ்ப் படிப்புகள் *(*Certificate Courses) தொடர்ந்து சூழலுக்கு ஏற்ப நடத்துவதுடன், சைவசித்தாந்தம் பட்டயப்படிப்பிற்கு *(*Diploma Course) ஒரு பொது தாளுடன் 6 சாத்திர நூல் தாள்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இவை இணைய வழியாக பருவத்திற்கு ஒன்றென நடத்தப்பெறும். பொதுத்தாளுடன் ஒரு சாத்திரத்தாளைப் படித்துத் தேர்ச்சிபெற்றால் அச்சாத்திர நூல் தலைப்புடன் சேர்த்து சைவசித்தாந்த சான்றிதழ் வழங்கப்பெறும்; ஒரு பொதுத்தாளுடன் மூன்று சாத்திர தாள்களைப் பயின்று தேர்ச்சி பெற்றால் சைவசித்தாந்த பட்டயச் சான்று வழங்கப்பெறும் என்ற வகையில் **சைவசித்தாந்த பட்டயப்படிப்பு** பாடத்திட்டம் உருவாக்கப்பெற்று பாடத்திட்டக்குழுவால் ஒப்புதல் பெறப்பட்டது.

Signature of members:

1. Dr. A. EKAMBARAM -
2. Dr. VAANI ARIVAALAN -
3. Dr. B. RAVIKUMAR -
4. Dr. K. SIVAKUMAR -
5. Dr. J. RADHAKRISHNAN -
6. Dr. G. JAYASHREE -
7. Mr. S. NEELAMEGAN -
8. Dr. N. APPADURI -
9. Dr. M. ANBAZHAGAN -
10. Kalaimamani V.K.T. BALAN -
11. Mr. K. SARAVANAN -
12. Dr. K.R. VENKATESAN -

9/9/23